# ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா

## திருப்பலி முன்னுரை

எருசலேம் ஆலயத்தில் இயேசு காணிக்கையாய் ஒப்புக்கொடுக்கப்பட்டதைக் கொண்டாடும் நாளை சிறப்பிக்க இன்றைய ஞாயிறு திருப்பலிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இறைவன் விரும்பும் காணிக்கையாக இயேசுவை வெளிப்படுத்துகிறார் சிமியோன் இறைவாக்கினர். தூய ஆவியால் உணர்த்தப்பட்டு இவரே 'புற இனத்தாருக்கு இருளகற்றும் ஒளி' என்று அறிக்கையிடுகிறோம். இதயம் நிறைந்த காணிக்கையைச் செலுத்தும்போது இறை ஒளி நம்மில் ஏற்றப்படுகிறது. மன இருள் அகற்றப்படுகிறது.

இன்றைய முதல் வாசகத்தில் இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக் கொடுப்பர் என்பதை "நான் என் தூதனை அனுப்புகிறேன், திடீரென தம் கோவிலுக்கு வருவார்" என முன்னறிவிக்கிறார். இறைவன் அன்பானவர்; தவறுகளுக்காக நம்மை புடமிடுவார். பொன்னைத் தூய்மையாக்குவது போல் நம்மை தூய்மையாக்குவார் என்கிறார் மலாக்கி இறைவாக்கினர். நம்மையே நாம் தூய்மைப்படுத்தி இறைவன் விரும்பும் இதயம் படைப்போம்.

இன்றைய நற்செய்தியில், "பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி" என்று இயேசுவை சிமியோன் வெளி உலகிற்கு வெளிப்படுத்துகிறார். ஆண்டவரையே இவ்வுலகிற்காக அர்ப்பணித்த புனித வளனாரும் தூய மரியாவும் போல நாமும் நம் வாழ்வின் நேரத்தையும் பொருளையும் நற்குணங்களையும் ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்வோம். இறையருள் பெறுவோம். இப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. பிற இனத்தாருக்கு ஒளியாக உம்மையே தந்தவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, திருச்சபையின் உறுப்பினர்கள் தம் அழைப்பின் பொருள் மற்றும் தன்மையை உணர்ந்து, தங்களையே உகந்த காணிக்கையாக்கி, தம் இறை வாழ்வின் ஒளியிலே மக்களை வழிநடத்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நேர்மையாய் வாழ அழைப்பவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், நேர்மையாய் பணிபுரியவும், அதிகாரப் போக்கில் திட்டங்களை செயல்படுத்தாமல், அவசியமான, வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களைச் செயல்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவும், மக்களை மகிழ்ச்சியாக வாழ விடவும் நல்லறிவு தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. திருக்குடும்பத்தை உருவாக்கியவரே எம் இறைவா!

எங்கள் குடும்பங்களில் அன்பு, எளிமை, தாழ்ச்சி மற்றும் இறைப்பற்று போன்ற நற்குணங்கள் நிறைந்து இருக்கவும், எங்கள் குழந்தைகள் உம் அருளால் தொடர்ந்து வழிநடத்தப்படவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணையின் தெய்வமே எம் இறைவா!

எம் பகுதியில் அறுவடையை நோக்கியிருக்கும் விவசாயப் பெருங்குடியினர் மகிழ்வோடு கதிர்களை நிறைவாக பெறவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், மாணவர்கள் சிறந்த ஞானத்தோடு தேர்வுக்கு தயாராகவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் போன்ற எதிர்பார்ப்புகள் நிறைவேறவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**